**புதுச்சேரி அரசு**

**புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்**

**சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத் திட்டம்**

**சான்றிதழ் படிப்பு: ஆகாயத்தாமரை (மதிப்பு கூட்டப்பட்ட கைத்தொழில்) தொழில்முனைவோர் பயிற்சி**

திறன் இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக மாண்புமிகு பிரதமர் அவர்களால், இந்திய அரசின் சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC) வழியாக பசுமை திறன் மேம்பாட்டு திட்டம் (GSDP) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.இந்தத் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுவின் (PPCC) சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத் திட்ட (EIACP Hub) மையம் **"ஆகாயத்தாமரை (மதிப்பூட்டப்பட்ட கைவினைத் தொழில் முனைவோர்)"** தலைப்பில் ஒரு சான்றிதழ் பயிற்சி 19 ஜனவரி 2026 முதல் நடத்துகிறது.

இந்தப் பயிற்சியில், வகுப்பறை பாடங்கள் மற்றும் செய்முறைப் பயிற்சி மூலம், பயிலாளர்கள் ஆகாயத்தாமரை செடியைச் சேகரித்தல், உலர்த்தல் மற்றும் அதை பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு ஏற்ற கைவினைப் பொருட்களை மற்றும் மதிப்பு கூட்டபட்ட பொருட்களை உருவாக்கும் திறனைக் கற்றுக்கொள்வார்கள்.. இந்தத் திட்டம், இளைஞர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குவதுடன், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பசுமை முயற்சிகளையும் ஊக்குவிக்கிறது.

இப்பயிற்சி வகுப்பிற்கு கட்டணம் ஏதும் இல்லை. புதுச்சேரி பகுதியைத் தவிர்ந்த பிற இடங்களிலிருந்து பங்கேற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலாளர்களுக்கு இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே, தேவையெனில் நேர்முகத் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

49 நாட்கள் நடைபெறும் இச்சான்றிதழ் பயிற்சி வகுப்பு 19 ஜனவரி 2026 அன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள கூகுள் படிவத்தின் (Google Form) இணைப்பின் மூலம் விண்ணப்பிக்கலாம்.: https://forms.gle/4A1N6SJP22Rd4eqK8

**கல்வி தகுதி:** 10ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் கைவினைத் துறையில் குறைந்தது 2 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்கள், அல்லது 12ஆம் வகுப்பு தேர்ச்சி (அல்லது அதற்குச் சமமான தகுதி) அல்லது NSQF நிலை 3.0 தொடர்புடை தகுதி மற்றும் கைத்தொழில் துறையில் 3 ஆண்டுகள் அனுபவம் அல்லது NSQF நிலை 3.5 தொடர்புடைய தகுதி மற்றும் கைத்தொழில் துறையில் 1.5 ஆண்டுகள் அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

**வயது வரம்பு:** 18 வயது மற்றும் அதற்கு மேல்.
**விண்ணப்பிக்கும் தேதி:** 10.11.2025 **விண்ணப்பிக்க கடைசி தேதி:** 10.12.2025.
**பாடநெறியின் கால அளவு:** 49 நாட்கள்; **இடங்கள் எண்ணிக்கை:** 30 (முப்பது).
**பயிற்சி இடம்:** புதுவை களஞ்சியம் இயற்கை விவசாயிகள் சங்க மண்டபம், பாகூர், புதுச்சேரி.

**மேலும் தகவலுக்கு:** 0413 – 2201256, 8344499914, 9789702745 என்ற தொலைபேசி எண்ணை காலை 10.00 முதல் மாலை 5.30 மணி வரை தொடர்பு கொள்ளவும் அல்லது envis@py.gov.in / envispdy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

***